நிர்வாக ஆணையர் அலுவலகம்
- 1 FEB 2008
சென்னை-600 005

சுருக்கம்

நிர்வாக அனுமதி – உயர்நிலைக் குழு பரிந்துரையை ஏற்று உள்ளாட்சி அமைப்புகளில் நிர்வாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்தி ஆணைகள் வெளியிடல்.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3)துறை

அரசாணை (ப) எண்.37

நாள் : 30-01-2008

படிக்க:

1. அரசாணை (ப) எண் 119, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 08.07.1998
2. உயர்நிலைக்குழு அறிக்கை 2007 பரிந்துரை எண்.16

-----

<u>ஆணை :</u>

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்குவதற்கான அதிகார வரம்பை பின்வருமாறு உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டன.

| நகராட்சிகளின் நிலை | நகராட்சி மன்றங்கள் | நகராட்சி நிர்வாக ஆணையர் | அரசு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| சிறப்பு நிலை & தேர்வு நிலை | 10 | 100 | 100–க்கு மேல் |
| முதல் நிலை | 7 | 100 | 100–க்கு மேல் |
| இரண்டாம் நிலை | 5 | 100 | 100–க்கு மேல் |

2. தற்போது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பெருமதிப்பிலான திட்டங்களை செயல்படுத்துவது, கட்டுமானப் பொருள்கள் மற்றும் பொதுவான விலையேற்றம், வளர்ச்சிப் பணிகளின் செயலாக்கம் துரிதப்படுத்தப்படுதல் ஆகிய காரணங்களின் அடிப்படையிலும், மாநில மூன்றாவது நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையின் அடிப்படையிலும் 9 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட மேற்சொன்ன அதிகார வரம்புகளை கீழ்க்காணும் வகையில் உயர்த்தி வழங்குவது குறித்து உயர்நிலைக் குழுவால் பரிசீலிக்கப்பட்டது.

| அதிகார அமைப்பு | மூன்றாம் மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரை (ரூபாய் இலட்சத்தில்) | நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| நகராட்சிகள் சிறப்பு நிலை | ...... | 40 வரை |
| தேர்வு நிலை | 35 வரை | 30 வரை |
| முதல் நிலை | 30 வரை | 20 வரை |
| இரண்டாம்நிலை | 25 வரை | 20 வரை |
| மூன்றாம் நிலை | ...... | 10 வரை |
| மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் | ...... | 50 வரை |
| நகராட்சி நிர்வாக ஆணையர் | ...... | 500 வரை |
| அரசு | 500க்கு மேல் | 500க்கு மேல் |

3. மேற்கண்ட பரிந்துரையின் அடிப்படையில், கீழ்க்காணும் வகையில் நகர்ப்புற உள்ளாட்சி அதிகார அமைப்புகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கும் அதிகார வரம்புகளை உயர்த்தி நிர்ணயிக்கலாம் என உயர்நிலைக்குழு பரிந்துரைத்துள்ளது.

| அதிகார அமைப்பு | தற்போதுள்ள நிர்வாக அனுமதி வரம்பு (ரூபாய் இலட்சத்தில்) | உயர்த்தப்பட பரிந்துரைக்கப்படும் நிர்வாக அனுமதி வரம்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| நகராட்சிகள் சிறப்பு நிலை | 10 வரை | 40 வரை |
| தேர்வு நிலை | 10 வரை | 35 வரை |
| முதல் நிலை | 7 வரை | 30 வரை |
| இரண்டாம்நிலை | 5 வரை | 25 வரை |
| மூன்றாம் நிலை | 2 வரை | 15 வரை |
| மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் | ...... | 50 வரை |
| நகராட்சி நிர்வாக ஆணையர் | 100 வரை | 500 வரை |
| அரசு | 100க்கு மேல் | 500க்கு மேல் |

4. எனவே, மேற்குறித்த உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளை அரசு கவனமுடன் ஆராய்ந்து அதனை ஏற்று அவ்வாறே ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அசா குறிப்பு எண் 78 / FS / P/08 நாள் 08.01.2008-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5
தலைமைப் பொறியாளர் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணி, சென்னை-5.
தலைமைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை) சென்னை-5
இயக்குநர், உள்ளாட்சி நிதிக் கணக்குகள், சென்னை -108.
மாநில கணக்காயர், சென்னை - 600 018.
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்
(சென்னை மாநகராட்சியைத் தவிர)
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
அனைத்து நகராட்சி ஆணையர்கள்
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநர், சென்னை -108
<u>நகல்</u>
நிதித்துறை, சென்னை -9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந2)துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.